# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2019.04.29 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் (நீக்கல்)

**2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டமூலம்**

*அரச தொழில்முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் (நீக்கல்)

*ச.வ.- ஒ. 14/2018*

***2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டம்.***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப்பெயர்.**

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் (நீக்கல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்.**

**2.** (இதனகத்துப்பின்னர் ''நீக்கப்பட்ட சட்டம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

**ஐயத்தைத் தவிர்த்தல்.**

**3.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியில் உள்ளவையும் , நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அரசுக்காகவும் அதன் சார்பிலும் திறைசேரிச் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவையும், நீக்கப்பட்ட சட்டத்தின் அட்டவணை I இலும் அட்டவணை II இலும் குறித்துரைக்கப்பட்டுள்ளவையுமான செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகள் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அரசுக்காகவும் அதன் சார்பிலும் திறைசேரிச் செயலாளருக்கு அவ்வாறு உரித்தாக்கப்பட்டவையாகத் தொடர்ந்திருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

**4**. இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டின் **43** ஆம் இலக்க, செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டம் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும் – பேணல்கள்.

(அ) பங்குகளை வழங்குதல் மற்றும் எல்லா ஒப்பந்தங்களையும், உறுதிகளையும், முறிகளையும், உடன்படிக்கைகளையும், புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும், உத்தரவாதங்களையும் அற்றோணித் தத்துவங்களையும், சட்டப்பிரதிநிதித்துவ அளிப்புக்களையும் மற்றும் எத்தன்மையானவையுமான வேறு சாதனங்களையும் நிறைவேற்றுதல் அத்துடன் அது தொடர்பாக அல்லது அதனைப் பின்பற்றி பெறப்பட்ட எல்லா உரிமங்கள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அங்கீகாரங்கள் உள்ளடங்கலாக, விடயத்துக்கேற்ப, செயற்பாடு குறைவாகவுள்ள தொழில் முயற்சிகளை அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களைக் கட்டுப்படுத்தும், நிருவகிக்கும், முகாமைசெய்யும் மற்றும் புத்துயிரளிக்கும் நோக்கத்துக்காக நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் அல்லது அதனைப் பின்பற்றி செய்யப்பட்ட எல்லாச் செயல்களும் அதன் நியதிகளுக்கிணங்க தொடர்ந்தும் செல்லுபடியானவையாகவும் வலுவிலுள்ளவையாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் வேறுவகையாகத் தீர்மானிக்கப்பட்டாலொழிய, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியில் உள்ளவையான அத்தகைய செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சி அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பிலான –

(i) ஏதேனும் கட்டிடம் மற்றும் அத்தகைய கட்டிடத்தின் பாகமாகவுள்ள எவையேனும் பொருத்துகைகள் அல்லது இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த அல்லது அதன் பாகமாகப் கொள்ளப்பட்ட ஏதேனும் கட்டிடம் உள்ளடங்கலாக அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனங்களும்;

(ii) உறப்பட்ட எல்லாப் பொறுப்புக்களும்;

(iii) எல்லா உரிமைகள், தத்துவங்கள், சிறப்புரிமைகள், அதிகாரங்கள், கடப்பாடுகள், கடமைகள் மற்றும் அக்கறைகளும்;

(iv) எல்லாப் புத்தகங்கள், கணக்குகள் மற்றும் ஆவணங்களும்,

இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியிலுள்ளவாறு, நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அவற்றைப் பின்பற்றி எந்த ஆளுக்கு அளிக்கப்பட்டு அல்லது உரித்தாக்கப்பட்டு இருந்ததோ அந்த ஆளின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமாக, பொறுப்புக்களாக, உரிமைகளாக, தத்துவங்களாக, சிறப்புரிமைகளாக, அதிகாரங்களாக, கடப்பாடுகளாக, கடமைகளாக, அக்கறையாக, புத்தகங்களாக, கணக்குகளாக மற்றும் ஆவணங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று கொடுத்துத் தீர்க்கப்படாதுள்ளதும் நட்டஈட்டுக்காக அல்லது நட்டஈட்டுக்காகச் செய்யப்பட்ட அளிப்பொன்றுக்காக நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டதுமான ஏதேனும் உரிமைக் கோரிக்கை அல்லது விசாரணை அத்தகைய நீக்கம் இருந்திருக்கவில்லை என்றாற்போன்று கொண்டு நடாத்தப்படுதலும் முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.